தென்னகம்

ஆசிரியர்: K.A. மதியழகன்

வெள்ளி | 2 – 10 – 59 | விலை 16 காசு

நிமிர்ந்த நன்னடை – – நேர்கொண்ட பார்வை !

அஞ்சாதநெறி – இவைதேவை !

★

பூவிருந்தவல்லி மாநாட்டில் திருமதி. இராஜேஸ்வரி சண்முகம் திறப்புரை

சேலம் மாவட்டத்திலே பிறந்து, தென்னாற்காடு மாவட்டத்திலே புகுந்து, தற்போது சென்னையிலே வாழும் என்னை, நமது மதிப்பிற்குரிய அறிஞர் அண்ணா அவர்கள் தோன்றிய இச் செங்கற்பட்டு மாவட்டத்தின் திராவிட முன்னேற்றக் கழக மூன்றாவது மாநாட்டை துவக்கி வைக்கும் திறப்பாளராகப் பணியாற்றச் செய்த மாநாட்டுச் செயலாளர்கள், வரவேற்புக்குழுவினர் ஆகியோருக்கும் அறிஞர் அண்ணா அவர்களுக்கும், என் அன்புகலந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் கழகத்திலே, அறிவிலும், ஆற்றலிலும், அனுபவத்திலும் சிறந்த தோழியர் பலரிருக்க, இதுபோன்றஎந்த ஒரு நிகழ்ச்சியிலும் கலந்தறியாத என்னை, இம் மாநாட்டுத் திறப்பாளராகப் பணியாற்றச்செய்துள்ள காரணம் கழகத்தில் நானும் பங்கு கொண்டுள்ளமையே என உணர்கிறேன். இதனை எனக்கு அளித்த முதற் பயிற்சியாகக் கருதுகிறேன். சீரும் சிறப்புமிக்க இம்மாநாட்டைத் திறந்து வைப்பதில் உண்மையிலேயே பெருமை கொள்கிறேன். பெரும் மகிழ்ச்சியெய்துகிறேன்.

தாய்க் குலத்தின் தகுதியறிந்து, இந்த மாநாட்டில் மகளிர்க்கு அதிகமான பங்கு தந்துள்ள, தலைவர்களுக்கு தமிழகப் பெண்கள் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய பல மாநாடுகளிலும், இந்த மாநாடு புதுமையாகவும், புரட்சிகரமாகவும் அமைந்துள்ளது. பண்பாடு வளர வேண்டுமாயின், பாரதி கூறியதுபோல், மகளிர்க்கு "நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை. நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறி, திமிர்ந்த ஞானச் செருக்கு' தேவை.

பண்டைத் தமிழகத்தே, புறவாழ்வுபோல் அக வாழ்வும் வளமிக்கதாய் இருந்தது என்று சங்க நூல்கள் உணர்த்துகின்றன. நூற்றுக்கு ஆறு பெண்கள் கவிஞர்களாய், அறிவுடைய பெரு மக்களாய் அரசரும் மதித்துப் போற்றக் கூடியதாக இருந்தது அந்தக் காலம். ஆனால், 'அடுப்பு ஊதும் பெண்களுககு படிப்பு எதற்கு' என்ற ஆணவக்குரல் எழுந்தது இடைக் காலமே. மீண்டும் 'மகளிர் மன்றம்" கூடுகிறது. அதற்கு நம் கழகம் நல்லதோர் ஆதரவை நல்குகிறது.

தாய்க்குலம், உரிமையுடனும், அறிவுடையவர்களாகவும் இருந்தால்தான், அறிவறிந்த மக்களை, வீரம் செறிந்த புதல்வர்களை நாட்டிற்கு அளிக்க முடியும். இந்தப்பணியை நம்கழகம்செய்து வருகின்றது. மகளிரை முன்னிறுத்தி, ஒரு மாநாட்டையே நடத்தக்கூடிய அளவிற்கு நம் கழகம் வளர்ந்திருக்கின்ற வளர்ச்சியை, எதையும் புரிந்துகொள்ள முடியாதவர்களுக்குக்கூட இந்த மாநாடு எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கிறது.

முதல் நாள் போரிலே கணவனை யிழந்தும், அடுத்தநாள் போரிலே தமையனை இழந்தும், அன்றைய போருக்குத் தன் ஒரே மகனையும் அனுப்பி வைத்த வீராங்கனையின் வாழ்வை, நம் தமிழக வரலாறுகூறுகிறது. இதன்வாயிலாக தன் நாட்டிற்கோ. மொழிக்கோ எந்தவிதமான இடையூறு வந்தாலும்; அறிவறிந்த மகளிர் அதனைப் பார்த்துக்கொண்டு பொறுமையாக இருக்கமாட்டார்கள் என்பதை அறிகிறோம்.

தாயகத்தின் விடுதலைக்கு– நம் திராவிடத்தின் விடுதலைக்கு, நம் உயிரையும் தியாகம் செய்யவும், நம் சந்ததியை. விடுதலை நோக்கிப் பயிற்றுவிக்கவும், இந்த மாநாட்டில் நாம் சபதம் எடுத்துக்கொள்வோமாக என்று கூறி, நல்ல பல திட்டங்களையும், தீர்மானங்களையும், கழகத்தில் மகளிர் ஆற்ற வேண்டிய பணிகள் பல பற்றியும் மதிப்பிற்குரிய அண்ணா அவர்களும், பொதுச் செயலாளர் அவர்களும் இந்த மாநாட்டில் பேசவிருக்கும் தோழர்–தோழியர் பலரும் தமது அரியகருத்துரைகளை வழங்குமாறு கேட்டுக் கொண்டு பெரு மகிழ்ச்சியுடன் இம்மாநாட்டைத் திறந்து வைக்கின்றேன் வணக்கம்.

வல்லவர்கள் இங்கே! வாய்ப்பெல்லாம் வடவருக்கா?

தென்னரசு

திட்டங்கள், செயல்முறைகள், வளங்கள் இவைகளை மட்டுமே வைத்து ஒரு நாட்டை மதித்த காலம் அல்ல இது. அரசியல் ஆக்கமன்றத்திலிருந்து அங்காடிக்கரைவரை திறமையைக் காட்டி ஆதிக்க உரிமையை நிலைநாட்டிக்கொள்ள ஒவ்வொரு நாடும் கனவு கண்டுகொண்டிருக்கும் எழுச்சிமிக்க நன்னேரம்.

அன்றைய ஜர்மானியர்களின் விஞ்ஞான ஆற்றலைக் கண்டு ரஷ்யாவும் அமெரிக்காவும் பெருமூச்சு விட்டதுண்டு.

அமெரிக்க நாட்டின் வளர்ச்சியை எண்ணி, கிரேட் பிரிட்டன் அஞ்சியஞ்சிச் செத்ததுண்டு.

உலக மக்களில் கால் பகுதியினர் தன் வசமிருந்தும், இழந்த பெருமையை, அழிந்த நாகரீகத்தைக் கட்டிக்காக்க வலிவின்றி சீனதேசம் கண்ணீர் வடித்த வரலாற்றின் ஈரம் இன்னும் காயவில்லை.

இன்று அந்த நாடுகளெல்லாம் உலக அரங்கத்தின் 'கதாநாயகர்'களாக ஒளிவிட்டுத் திகழ்கின்றன. ஒருவரை மறந்து ஒருவர் காரியமாற்ற முடியாத வகையில் வலிமைபெற்று வாழ்கிறார்கள் அந்தந்த நாட்டின் தலைவர்கள், இத்துணை வளர்ச்சிக்கு காரணம், அந்தந்த நாட்டின் பிதாக்கள் அவரவர்களின் பலவீனங்களை அறிந்து நிறைவுபடுத்திக்கொண்டார்கள் என்பதைத் தவிர வேறில்லை. ஆற்றலில்லாதவர்கள், ஆற்றலுக்குப் பயிற்சி பெற்றார்கள். ஆற்றல் மிகுந்தவர்களின் ஆற்றல் பெருமையுடன் கௌரவிக்கப்பட்டது. நியாயமான பெருமை சோற்றுப் பட்டாளங்களின் இரத்தத்திலே கூட சுழிபாய்ந்து ஓட ஆரம்பித்தது. சொல்வல்லார் வளர்ந்தனர்; சோர்வில்லார் பெருகினர்; விஞ்ஞானிகள் வீறுகொண்டு எழுந்தனர். இன்று அவர்கள் தலை நிமிர்ந்து நடக்கிறார்கள். உனக்கு நான் சளைத்தவனல்ல—என்று ஒருவரை ஒருவர் மிரட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

உலக வல்லரசுகளில் கிங்காங் தாராசிங் என்று மதிக்கப்பெறும் குருஷேவும், ஐசனோவரும் சந்தித்துப் பேசுகிறார்கள்.

"நான் முதலில் ஆடு மேய்த்தேன்; இன்று இந்தப் பதவிக்கு வந்திருக்கிறேன்." என்கிறார் விருந்தாளி.

"நானும் அப்படித்தான். கூலி வேலை பார்த்தேன்; பின், ஒரு ஆலைக்கு அதிபதியானேன். இன்று இந்தப் பதவிக்கு வந்திருக்கிறேன்." என்கிறார் மற்றவர். இப்படி தனிப்பட்ட தலைவர்களின் வரலாறு, தங்கள் தங்கள் தாயகங்களின் எழுச்சியை எதிரொலிப்பதாக அமைகின்றது.

இந்நகைய அரசியல் அமளியில் இந்தியப் பேரரசு கண்ட முன்னேற்றம் என்ன? ஒரே அரசியல் சட்டத்தின் கிழ் ஒரு உபகண்டத்தையே கட்டியாளும் 'படேல் இந்தியா' பெற்ற சன்மானம் எத்தகையது? 'பாவம்! பிழைத்துப் போகட்டும்' என்ற பரிதாபத்திற்குரிய நொண்டிக் கிளியை நடத்துவதுபோல்தான் இதுவரை இந்தியா உலக அரங்கில் நடத்தப்பட்டு வந்திருக்கிறது என்பதை எவரும் ஏற்க மறுக்கமாட்டார்கள். ஏன் இந்தியாவுக்கு இந்த நோயாளிப் பட்டம்? இரத்த ஓட்டமில்லாத வெறும்சோகையேறிய உடம்புதானா இந்தியா? இது பரிசீலனைக்குரிய சிக்கலல்ல! ஒரே காரணம், இந்தியா எந்தத் துறையிலும் உண்மையான திறமைசாலியைப் பயன்படுத்தவில்லை என்பதுதான்! நாட்டுக்குக் கிடைக்கும் கீர்த்தியைக் காட்டிலும். செல்வாக்குப் பெற்ற தனிப்பட்ட மனிதர்களின் இதயதாகங்களைத் தீர்ப்பதிலேயே இந்தியா கவனம் செலுத்தி வருவதன் அறுவடைதான் 'பிள்ளைப்பூச்சி' என்ற பட்டம் பெற்றதற்குக் காரணமாகும்.

ஆட்சி அரசியலில், குறிப்பிட்ட துறையில் குறிப்பிடத்தகுந்த ஆற்றல்கூட இல்லாதவர்களின் பொறுப்பில் அந்த இலாகாவே ஒப்படைக்கப்படுகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் மூன்று மந்திரிகளுக்குக் குறையாமல் இதற்குச் சான்றாக விளங்குகிறார்கள்.

நிர்வாகத் துறையிலுள்ள உயர்ந்த உத்தியோகஸ்தர்களின் அதிகாரங்கள் அனைத்தும் காங்கிரஸ் சரித்திரத்தின் அத்தியாயங்களாக விளங்குவோரின் கண்ணாடிக் கூட்டுக்குள் சரணடைந்து கிடக்கின்றன. கடல் பொங்குவதை, கப்பல் தீப்பற்றி எரிவதை, பீரங்கி முழங்குவதை, பெரிய நகரங்கள் அழிவதை நேரில் பார்த்தும் உள்ளம் கலங்காமல் உயர்ந்த பணியாற்றும் போர்ப்படைத் தலைவர்களைக்கூட 'தேசியம்' மிரட்டுகிறது என்பதை தளபதி திம்மையா தேசமெங்கும் கிறிக்காட்டிவிட்டு அடங்கியிருக்கிறார். உறவில்லாத இலாக்காகளில் தொடர்பில்லாத அமைச்சர்கள் தலையிடுகிறார்கள் என்று தேஷ்முக் தனது பதவி காலத்தின் இறுதிக் கட்டத்தில் வெளியிட்ட வாக்குமூலத்தைத்தான் திம்மையா நிருபித்தார் என்பதை 'நேரு ராஜ்ய'த்தின் தன்மை அறிந்தவர்கள் முழு மனதுடன் ஒப்புக்கொள்வார்கள். இவற்றின் விளைவுதான் சர்வதேசக் கொலுமண்டபத்தில் இந்தியா வெறும் எலும்புக் கூடு என்று பட்டம் பெறுவது. இந்தக் குறையைத் தீர்த்துக்கொள்ள மார்க்கமுண்டா என்றால், இல்லை என்று திடமாக கூறி விடலாம். காரணம் மக்களுக்கும் ஆட்சிக்கும் இந்த தொடர்பில்லை. மக்களுக்கு ஆட்சியின் பேரில் நல்லெண்ணம் இல்லை; ஆட்சிக்கு மக்கள்மீது அன்பில்லை. நல்லெண்ணமும் அன்பும், தொடர்பில்லாத இரண்டு முனைகளை இணைக்க மல்யுத்தம் புரிந்து வரும் அரசியல் சட்டம் சுரப்பலகை அல்லவே!

அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர்களை அணுகி, இந்தியா, உலக அரங்கில் நிலையான நல்ல இடத்தைப் பெற முடியாததற்குக் காரணம் என்ன என்று கேட்டால், 'அறிவாற்றல் மிக்கவர்கள் அனைவரும் தென்னாட்டிலேயே மலிந்து விட்டார்கள்' என்று பதில் சொல்வார்கள்.

"அறிவாளிகள் தென்னாட்டில் இருந்தாலென்ன; தென்னாடும் பாரததேசம் தானே" என்று அடுத்த கேள்வியைப் போட்டால், "இருந்தாலும், அதெப்படி ஆகும், தென்னாடு தென்னாடுதான்" என்று துணிந்துசொல்வார்கள். காலஞ்சென்ற குமாரசாமி ராஜாவைப் போன்றவர்கள் கண்களை மூடுமுன் இந்தப் பேருண்மையைக் கக்கி விட்டுத்தான் போனார்கள். சாகப் போகும்போது இந்தஉண்மையைக்கூறலாம்என்று சொன்னாரோ, அல்லது இந்த உண்மையைத் தெரிவித்தபின் வாழக்கூடாது என்று இறந்தாரோ தெரியவில்லை. ஆனால், யார் என்ன கூறினாலும் திராவிடத்தின் ஆற்றல், வளம், எல்லா வகையிலும், டில்லி சந்நிதானத்தால் புறக்கணிக்கப்பட்டு வருவதை நாடறியும். நாளுக்குநாள் 'விசுவாமித்திரர்'களின் கோபம் அதிகரித்து வருகிறதே தவிர தணியவில்லை. இந்த வகையில் மத்திய சர்க்கார் இப்பொழுது விளையாட்டுப்பந்தயப் பிரச்சினையிலும்தலையிட்டு, தென்னாட்டை ஒதுக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் டில்லி தலையிட்டுக் குழப்பியிருப்பது அவர்களுக்கு அரசியலில் யூகம் அறவேஇல்லை என்பதைத் தெளிவாக ருசுப்படுத்துகிறது. இல்லாவிட்டால், மாணவர்கள் அரசியலில் கலக்கக்கூடாது என்று கூறிவிட்டு, கவலையில்லாமல் போட்டிப் பந்தயங்களில் பங்கேற்று விளையாடும் வினயமுள்ள மாணவர்களின் உள்ளங்களில் 'வடக்கு-தெற்கு' என்ற பேதம் வளர இப்படி வழி (!) வகுத்துக் கொடுப்பார்களா?

பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இந்தியத் துணைக்கண்டத்தில் வளர ஆரம்பித்த காலத்திலிருந்தே மேலைநாட்டு விளையாட்டுப் பந்தயங்கள் இங்குபரவ ஆரம்பித்துவிட்டன. ஆங்கில மொழிப் பேச்சில்; எழுத்தில் ஆங்கிலேயரையே வெல்லக் கூடிய அளவிற்குப் பயிற்சி பெற்ற தென்னகம், அந்தநாட்டு விளையாட்டுகளையும் கற்றுத்தேர்ந்து, வெற்றியும் விருதும் பெறத் தொடங்கியது. அந்நிய நாட்டின் எந்த ஆற்றலையும் சிறிது நாட்களில் தன் 'கைவந்த கலை' யாக்கிக் கொள்ளும் திராவிடத்தின் தனித்தன்மையை மூடி மறைக்கத் திட்டமிட்டுக் காரியமாற்றும் 'டில்லி மிராசு' தென்னாட்டுவிளையாட்டு வீரர்களையும் உதாசீனப்படுத்தத் தொடங்கிவிட்டது. ஒரு நாட்டின் மதிப்பில், அந்த நாட்டின் விளையாட்டு வீரர்களின் திறமைக்கும் பங்குண்டு என்ற நிலைபிறந்தபிறகு அகண்ட இந்தியாதேசம் என்று இருதயத்தைத் திறந்து காட்டிப் பேசும் 'தவசிரேஷ்டர்'கள் ஆட்சியில் தென்னாட்டு விளையாட்டுவீரர்கள் மட்டும் ஒதுக்கப்படுவதற்கான காரணமென்ன?

அந்தஸ்தைக் காத்துக் கொள்வதற்காக ஐ. நா. சபையில் சேர்ந்திருப்பதுபோல், காமன்வெல்த்தில் உறவு கொண்டிருப்பதைப்போல் ஒலிம்பிக் பந்தயத்திலும் இந்தியா கலந்து கொண்டு

(7-ம் பக்கம் பார்க்க)

மணமடல்

★

அன்புடையீர்,

வணக்கம், நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 1990 புரட்டாசித் திங்கள் 18-ஆம் நாள் (4-10-'59) ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணி அளவில்,

செல்வன் :

ப. புகழேந்திக்கும்

செல்வி :

கருணைவுக்கும்

சென்னை, தியாகராயநகர், பிரகாசம் ரோடு, 5ம் எண் இல்லத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் திருமண விழாவிற்குத் தாங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

அன்பன்,
கண்ணதாசன்.



மலர் 1] [இதழ் 37

சிதம்பர இரகசியம்!

வருகிற பதினெட்டாம் நாளன்று சிதம்பரம் தொகுதியைச்சேர்ந்த ஒரு இலட்சத்து எழுபத்து நான்காயிரம் வாக்காளர்கள், இருநூற்று நாற்பது ஓட்டுச் சாவடிகளுக்குச் சென்று தங்களது தீர்ப்பை வழங்க இருக்கிருர்கள். கடந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு நடைபெறும் இடைத் தேர்தலில் சிதம்பரம் தொகுதி தேர்தல் பல்வேறு அம்சங்களில் முக்கியமான தென்றே கருதுகிருேம்.

சிதம்பரம் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ், ஆகியவைகளுக்கு இடையில் நேரடிப் போட்டி நிலவுகிறது. வேறு எந்தத்துறையில் திறமைக் குறைவானராக இருப்பினும், தேர்தல் களத்தில் மிக சாமர்த்தியசாலியான காங்கிரஸ் ஏற்கனவே தனது இரதகஜதுரகபதாதிகளுடன் போருக்கு ஆயத்தமாகி விட்டது, கனம் காமராஜரின் 'கிராம சோதனே' வெற்றிகரமாய் நடந்தேரியுள்ளது. வழக்கமாய் காங்கிரசுக்கு கிடைக்கும் மெருகு குலேயாத மோட்டார்கள், அதன் உரிமையாளர்களான மேனுமினுக்கிகளான மிட்டாமிராசுகள் அத்தனேயும் சிதம்பரத்தில் குவிகின்றன.

ஆளுங்கட்சியான காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடும் திராவிட முன்னேற்றக் கழகத்தை நாடு அறியும், மோட்டார்ப்படை கிடையாது. மக்கள் வரிசையைத்தான் காட்ட முடியும், பணம் கிடையாது, குணத்தைத்தான் நீட்டமுடியும், கனகமணி மாளிகைகளேயும், தில்லேக்கோவிலென எழுந்துள்ள ஆலேயரசர்களின் தொழில்நிலேயங்களேயும்காண்பித்து "இதன் சொந்தக்காரர்கள் எம் பக்கம்" என்று அடையாளம் காட்டும் நிலேயிலே இல்லாதது. மண் குடிசைகளிலும் வயலோரத்திலும், வாய்க்கால் ஓரத்திலும், சேற்றிலும் சகதியிலும், சேரியிலும் நாட்டுப்புறத்திலும், அவதியுறும் நம்மவரை நம்பியே இந்த ஜனநாயகக் கடமையில் ஈடுபட்டுள்ளது.

சென்னே மாநிலத்தை ஆட்டிப்படைக்கும் காங்கிரஸ் மமதையாளரின் அலட்சியப் போக்கிற்கும் ஆணவத்திற்கும் ஒரு உதாரணம் கூற வேண்டுமாளுல், தேர்தலில் போட்டியிடுவதற்கு யோக்கியதாம்சத்தை இழந்துவிட்ட ஒருவரை – தேர்தல் கமிஷளுல் 'மூன்று ஆண்டுகளுக்கு எந்தத்தேர்தலுக்கும் போட்டியிடக் கூடாது' என்று தடை விதிக்கப்பட்ட ஒருவரை – ஏற்கனவே காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்ட ஒருவரை – தனது அபேட்சகராக ஏற்றுக்கொண்டு மனு கொடுத்தது. பொதுமக்கள் கண்களில் மிளகாய் தூவும் இந்த ஏற்பாட்டிற்கு டெல்லியில் உள்ள மத்திய பார்லிமெண்டரி போர்டின் அங்கீகாரமும் கிடைத்திருந்தது. ஆளுல் இந்த மோசடியை–கண்கட்டு வித்தையை தக்கதருணத்தில் வளரும் நமது வழக்கறிஞர் குழு கண்டுபிடித்தது. தி. மு. க. அபேட்சகர் சார்பில் வழக்கறிஞர் வி. வி. சாமிநாதன் அவர்கள் காங்கிரஸ் அபேட்சகரின் மனு செல்லாதுஎன அறிவிக்க வேண்டுமெனக் கிளப்பிய ஆட்சேடணேயை தேர்தல்அதிகாரி ஏற்றுக்கொண்டு காங்கிரஸ் அபேட்சகரின் மனுவை நிராகரித்தார். தவறை எடுத்துக் காட்டிய நல்ல செயலுக்குப் பாராட்டையும் தெரிவித்துக் கொண்டார், காங்கிரஸ் மங்கையின் சுயம்வரத்தில் ஏற்பட்ட இந்த அலங்கோலக் காட்சியால், வேறொருவரின் கழுத்தில் மாலே விழுந்துள்ளது. உண்மையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின துவக்கப்பணி நல்ல ஆரம்பமாளுலும் வெறும் ஆரவாரத்திலே ஈடுபட்டுவிடக் கூடாது. தனக்கு ஏற்பட்டுவிட்ட அவமானத்திற்குச் சாந்தி தேட காங்கிரஸ் ஆத்திரக்கோலம் பூண்டுள்ளது.

தவிர்க்கமுடியாத இந்த ஜன நாயக் கடமையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட வேண்டிய சூழ்நிலேகளே பொது மக்கள் நிச்சயமாக தெளிவாக உணர்ந்துள்ளார்கள். வெறும் ஆரவாரத்திற்கோ, தம்பட்டமடித்துக்கொள்வதற்கோ, தமக்கு ஓர் முக்கியத்துவம் வேண்டுமென்பதற்கோ திராவிட முன்னேற்றக்கழகம் என்றும் எந்தச் செயலிலும் ஈடுபட்டதில்லே. கடந்த பொதுத் தேர்தலின்போது திராவிட முன்னேற்றக் கழகம் நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் சட்டசபைத் தேர்தலுக்காக போட்டியிட்டது. ஆளுல் சிதம்பரம் இரட்டை உறுப்பினர் தொகுதியில், பொது இடத்திற்குப் போட்டியிட்ட திராவிட முன்னேற்றக் கழகம், ஒதுக்கப்பட்ட இடத்திற்காக தனது அபேட்சகரை நிறுத்தவில்லே. காரணம் அந்த தொகுதியில் ஆதரவு இல்லே என்பதால் அல்ல. பொது இடத்திற்குப் போட்டியிட்ட தோழர் பொன். சொக்கலிங்கம் சில ஆயிரம் வோட்டுக்கள் குறைவாகப் பெற்றதிளுல் வெற்றிக்கான வாய்ப்பை இழந்தார். இருப்பினும் ஒதுக்கப்பட்ட இடத்திற்குப் போட்டியிடாததற்குக் காரணம், அறிஞர் அண்ணு அவர்களின் யோசனேயை தி.மு.க. தேர்தல் குழு மதித்து நடந்தது.

நல்லவைகளே – தியாகத்தை – தொண்டினே – பொது நல சேவையினே – எங்கிருந்தாலும், எவரிடம் இருந்தாலும் பாராட்டி மதிக்கும் பெருங்குணம்படைத்த நமது அண்ணு அவர்கள் "சாமி சகஜானந்தா அவர்கள் அந்தஇடத்திற்கு போட்டியிடுகிருர். பழங்குடி மக்களுக்காக போராடிய முதியவர், நெடு நாட்களுக்கு முன்பே, வைதீகத்தின் எதிர்ப்புக்கும், சமூகப் பிரஷ்டத்திற்கும், ஜாதி வெறிக்கும் அஞ்சாமல் ஆதி திராவிட மக்களின் விடுதலேக்கு போராடிய பெருந் தொண்டர். அவர்கள் கல்வி வளர்ச்சியில் அக்கரை காட்டிய பெருந்தகை. அவர் சட்ட மன்றத்தில் இடம்பெற வேண்டும். அந்த லட்சியத்தை மதிக்கும் வகையில் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிடத் தேவையில்லே" என்று விரும்பினுர்கள். போட்டி தவிர்க்கப்பட்டது. இந்த பெருந்தன்மைக்கும், வழியிலேபோகிறவர்களேயெல்லாம் வரித்துக்கொள்ளும் காங்கிரஸ் போக்கிற்குமுள்ள வித்தியாசத்தைச் சிதம்பரம் தொகுதி வாக்காளர்கள் சீர்தூக்கிப் பார்க்க கடமைப் பட்டுள்ளார்கள்.

தென்னுற்காடு மாவட்டச் செயலாளர் தோழர் கோவிந்தசாமி, எம். எல். ஏ., வழக்கறிஞர்கள் தில்லே வில்லாளன், வி. வி, சாமிநாதன், நகரச்செயலாளர் சக்ரவர்த்தி, இரத்தின பாலகுருசாமி, மாணவர் கழகப் பொதுச் செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம், வேணுகோபால் போன்ற தோழர்கள் இரவு பகலெனப்பாராது சிதம்பரம் பொறுப்புகளே மின்னல் வேகத்தில் நிறைவேற்றி வருகின்றனர். அவர்களது பணியைத் துரிதப்படுத்த, சிதம்பரம் செயற்குழு, மாயவரம் பொதுக்குழு ஆகியவைகளின் தீர்மானப்படி, பொதுச் செயலாளர் வேண்டுகோளின்படி, பல்வேறு மாவட்டங்களும் கிளேக் கழகங்களும் தங்களது அன்பளிப்புகளே விரைவில் அனுப்பி உதவுமாறு வேண்டுகிருேம். காலத்திளுல் செய்யும் உதவி, இந்த நல்ல காரியத்திற்கு உரமூட்டும் என்பதை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவைகளின் காவலர்களாகிய நமது கழக நண்பர்கள் உணர்வார்கள் என்று நம்புகிருேம். கடந்த ஞாயிறன்று சிதம்பரம் டவுன் ஹால் மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் தி.மு.க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தேர்தல் பிரசாரத்தை துவக்கி வைத்தார். அன்று காலே வழக்கறிஞர் வி. வி. சாமிநாதன் தலேமையில் நடைபெற்ற தேர்தல் தலேமை அலுவலகத் திறப்புவிழாவில் தோழர்கள் கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., வழக்கறிஞர் தில்லே வில்லாளன் ஆகியோர் கலந்து கொண்டனர். சிதம்பரம் எல்லேயிலுள்ள தஞ்சை, திருச்சி மாவட்டத் தோழர்களும், தென்னுற்காடு மாவட்டக் கிளேகளும் இந்த பணியில் பெரும் பங்குகொள்ள வேண்டுகிருேம்.

இந்தி ஆதிக்கத்தை மைல் கற்களிலும் பதிக்க அனுமதித்த காங்கிரஸ் கட்சி, 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்க வேண்டுமென்று கேட்டதற்காக கள்ளக்குறிச்சியில், தம்மம்பட்டியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்த காங்கிரஸ, மவுண்ட்ரோட் மைதானத்தில் மொய்தின் பிச்சை, கோவிந்தராவ் ஆகியவரையும் சென்னே ஹார்பரில் ஆறு வாலிபர்களேயும் பிணமாக்கிய காங்கிரஸ்–டால்மியாபுரத்தை 'கல்லக்குடி'யாக்க வக்கில்லாத காங்கிரஸ் – அறிஞர் அண்ணுவை அடையாறு 'லாக்கப்பிலே' பூட்டிய காங்கிரஸ் – காலில் நகம்முளேத்த முதலாய் முழங்கால் சேற்றிலே ஆதி திராவிட மக்கள் அல்லலுறுவதைக் கண்டும், அவர் நிலே மாற சுண்டுவிரலே அசைக்காது வடக்கே சாந்திகார், உல்லாச நகர், கோவிந்தபுரி, கண்ட்லா என்று அழகுத் திருநகர்களே எழுப்பும் காங்கிரஸ், ஏழை உழவனே ஏறிட்டுப்பார்க்காது, நிலப்பிரபுக்களின் ஆதீனம் நீடிக்க நீண்டகால குத்தகைச்சீட்டு எழுதிக்கொடுத்துள்ள

(6-ம் பக்கம் பார்க்க)

காபூல் முதல் லெனின்கிராடு வரை

ஈ.வி.கே.சம்பத்

12

மாஸ்கோவில் நான் தங்கியிருந்த நாட்களில் மாஸ்கோவிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. மேனன் அவர்களை சந்தித்து உரையாடும் வாய்ப்பைப்பெற்று மகிழ்ந்தேன். ஒருநாள் மதியம் உணவிற்கு தமது இல்லம் வருமாறு திரு. மேனன் அவர்கள் எனக்கும், திரு. ராமசாமி அவர்கட்கும் அழைப்பு விடுத்தார். அவர் இல்லத்திற்கு நாங்கள் சென்றபோது எங்களைத் தவிர பிரிட்டனிலுள்ள ஒருசெல்வாக்கு மிக்க பத்திரிகையின் மாஸ்கோ நிருபரும், டெல்லி பத்திரிக்கை ஒன்றின்பிரதிநிதியும், மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக பணியாற்றும், ஒரு இந்தியரும் அழைக்கப்பட்டிருந்தனர். திருமதி மேனன் அவர்கள் இன்முகம் காட்டி மிகக் கனிவோடு எங்களை வரவேற்ருர். ஒரு தூதுவரின் மனைவிக்கு இருக்க வேண்டிய அறிவு நுட்பமும், கலை, இலக்கியம், அனைத்துலக அரசியல் நிலைமைகள் ஆகியவற்றை பற்றிய தெளிந்த அறிவும், பெருந்தன்மையோடும் இனிமையாகவும், சரளமாகவும், இவை குறித்து பேசும் திறமையும் ஒருங்கே வாய்கப்பெற்று திருமதி மேனன் அவர்கள் தமது கணவருக்கு பெருந் துணையாக உடன் இருந்து வருகிருர்கள். அவர்கள் எங்களோடு உரையாடிக் கொண்டிருந்த சிறிது நேரத்தில் திரு. மேனன் அவர்களும் கூடத்திற்கு வந்து எங்களை வரவேற்ருர். இந்தியா வெளிநாடுகளுக்கு அனுப்பியுள்ள தனது தூதுவர்களில் மிகவும் திறமைபடைத்த சிலருள் திரு. மேனன் அவர்கள் மிக முக்கியமானவர். அந்த மிகப் பெரிய அரசோடுநமக்குள்ளநல்லுறவை பாதுகாப்பதிலும், பலப்படுத்திகொள்வதிலும் அவர் பெரும் வெற்றி கண்டிருக்கிருர் என்றே சொல்ல வேண்டும். மேனுடுகளில் உண்ணும்போது உரையாடுவதை ஒரு நுண்கலையாக ஆக்கியுள்ளனர். அந்தக் கலையில் மேனன்கள் இருவருமே மிகவும் வல்லவர்களாக விளங்கினர். சோவியத் மக்களின் வாழ்க்கை முறைகளின் தன்மைகள் பலவற்றை நாங்கள் அவர்கள் வாயிலாக கேட்டறிந்து விளக்கம் பெற்ருேம். விருந்தில் எனக்கருகில் அமர்ந்த பிரிட்டிஷ் பத்திரிக்கையின் நிருபர் இந்திய அரசினரின் ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றி கேட்ட கேள்விகளிலிருந்து எவ்வளவு கூர்மையாக இந்தியாவின் நடவடிக்கைகளை அவர் கவனித்து வந்திருக்கிருர் " என்பது புலனுகியது. மொத்தத்தில் அந்த விருந்தில் கழித்த சில மணி நேரங்கள் மிகவும் மகிழ்ச்சிகரமாகவும், பயனுள்ளதாகவும் அமைந்திருந்தது.

* * *

நாங்கள் மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த லெனின் கிராடுக்குப் புறப்படும் நாளும் வந்தது. இரவு பனிரெண்டு மணி சுமாருக்கு மாஸ்கோவிலிருந்து புறப்படும் ரயிலில் நாங்கள் பயணமாவது எனத் திட்டமிடப்பட்டிருந்தது. அதன்படி பத்தரை மணிக்கெல்லாம் நாங்கள் விடுதியை விட்டு எங்களுக்குத் தேவையான சாமான்களை மட்டும் எடுத்துக் கொண்டு மற்றவற்றை அங்கு அவற்றிற்கென தனியாக உள்ள அறையில் வைத்துவிட்டு ரயிலுக்கு "இன்டூரிஸ்ட்" பஸ்ஸில் கிளம்பினேம். அங்கொரு வேடிக்கை என்னவெனில் நமது நாட்டில் உள்ளதைப்போல் ஒரே ரயில் நிலையத்திலிருந்து பல ஊர்களுக்கு ரயில்கள் போகும் முறையின்றி முக்கியமான ஊர்களுக்கு செல்லும் ரயில்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி ரயில் நிலையங்கள் நகரின் பல பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. அம்முறைப்படி மாஸ்கோவில் "மாஸ்கோ ரயில் நிலையத்தையும்" லெனின்கிராடு நகரில் "லெனின் கிராடு ரயில் நிலையத்தையும் எங்கு தேடினுலும் காணமுடியாது! அந்த முறைப்படி சென்னையில் ரயில் நிலையங்கள் அமைக்கப்பட்டால் சென்னை நகரில் "தூத்துக்குடி ரயில் நிலையம்." "திருவனந்தபுரம் ரயில் நிலையம்" "உதகமண்டலம் ரயில் நிலையம்" என ஏற்படுமேயன்றி "சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம்" "சென்னை எழும்பூர் ரயில் நிலையம்" என்பவை எடுபட்டு போய்விடும். மாஸ்கோ நகரிலுள்ள லெனின்கிராடு ரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்த மிகவும் அழகுவாய்ந்த "செங்கணை விரைவு வண்டியில்" ஏறினேம். மிகப் பெரிய டீசல் என்ஜினைக் கொண்டு இழுக்கப்படும் பெட்டிகளனைத்தும் கவர்ச்சிகரமான நீலவண்ணத்தில் நேர்த்தியான அமைப்புகளோடு விளங்கின. சோவியத் நாட்டிலேயே மிகச் சிறந்த ரயில்வண்டியாக இச்செங்கணை விரைவு வண்டி கருதப்படுகிறது. இவ்வண்டியில் இருவகுப்புகள் உள்ளன. அவற்றுள் நாங்கள் இரண்டாம் வகுப்பிலேயே பிரயாணம் செய்தோம். பெட்டிகள் ஒவ்வொன்றும் தனித்தனி அறைகளாகத் தடுக்கப்பட்டு எல்லாவற்றிற்கும் பெட்டியின் ஒருஓரத்தில் நெடுக மிகக் குறுகியபாதை அமைக்கப்பட்டு மிக வசதியாக இருந்தது. ஒரு அறையில் எதிரெதிராக தாழ இருவரும், மேற்தட்டுகளில் இருவருமாக நால்வர் படுக்கவும், அவர்களது பெட்டிகளையும், பைகளையும் வைப்பதற்கு அறைக்குவெளியே நெடுக செல்லும் தாழ்வாரத்தின் மேல் பரண் அமைக்கப்பட்டும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொருவருக்கும் படுக்கைகளும் குளிருக்குக் கம்பளிகளும் தரப்படுகின்றன. ஒவ்வொரு அறையிலும் வெளியில் இயங்கும் ரேடியோவான ஒலிபெருக்கி பெட்டி ஒன்று பொருத்தப்பட்டிருக்கிறது. அதை நிறுத்தவும், இயக்கவும், ஒலியை திட்டப்படுத்தவும் விசை ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. பெட்டியிலுள்ள வழிப்போக்கர்களின் வசதிகளைக் கவனித்துக் கொள்ளவும் இறங்க வேண்டிய ரயில் நிலையங்கள் வருவதற்கு சற்று முன் உறங்கும் வழிப்போக்கர்களை எழுப்பி இறங்க ஆயத்தப் படுத்தவும் ஆண் பணிகளை ஒருவர் கவனித்துக் கொள்கிருர். மாஸ்கோவிலிருந்து லெனின் கிராடுக்கு 400 மைல்கள் தொலை. இந்த 400 மைல்களுக்கும் ரயில்பாதை வளைவு, நெரிவு இல்லாமல் ஒரே நேர்க்கோடாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தொலைவினை எட்டேமுக்கால் மணி நேரத்தில் இவ்விரைவு வண்டி கடந்துவிடுகிறது. பிரயாணம் வெகு சுலபமாக இருந்தது. காலை 6-30 மணிக்கெல்லாம் பெட்டியின் பணியாளர் தேநீர் தயாரித்துக் கொண்டு (பாலில்லாமல்) வந்து எங்களை எழுப்பி ஆளுக்கொரு கோப்பைத் தேநீரும் சில சர்க்கரை கட்டிகளும் கொடுத்துக் காலை வணக்கம் சொன்னுர். காலையில் 8-45 மணிக்குவண்டி லெனின் கிராடை அடையுமுன் ஏறத்தாழ இரண்டு மணிநேரம் பலகணிவழியே பாதையின் இருமருங்கிலும் உள்ள பயிர் செய்யப்பட்ட நிலங்களையும், சிற்றூர்களையும், காடுகளையும் பார்த்து மகிழ்ந்தோம். அக்டோபர் ஆரம்பமாயிருந்ததால் ஆறரை மணிக்கெல்லாமே அந்தப் பகுதிகளில் கதிரவன் உதயம் இருந்தது. அதுவே டிசம்பர் திங்களாக இருந்திருந்தால் லெனின் கிராடில் இறங்கும் போதே கூட இருட்டாகத்தான் இருக்குமெனக்கூறினர். சிற்றூர் பகுதிகளில் அதிகாலையிலேயே மக்கள் நடமாட்டம் தொடங்குவதை கண்டோம். இச்சிற்றூர்களில் பெரும்பாலும் சிறு கிணறுகளிலிருந்து பெண்கள் தண்ணீர் இறைப்பதையும், கிணற்றடியில் துணிகளை கட்டையால் அடித்து துவைப்பதையும் பார்த்தோம். சரியாக எட்டேமுக்கால் மணிக்கு வண்டி லெனின்கிராடு ரயில் நிலையத்தைவந்தடைந்தது.

சோவியத் நாட்டில் மாஸ்கோவிற்கு அடுத்த பெருநகரம் லெனின் கிராடு. ஏறத்தாழ 30 லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட இந்நகரம் உலகிலேயே மிக அழகிய நகரங்களில் ஒன்ருகும். புரட்சிக்கு முன்பு ரஷ்யாவின் தலைநகராக "பெட்ரேகிராடு" என்னும் பெயரில் விளங்கியது இதே நகர்தான். 1314க்கு முன்பு இதே நகரம் "ஸெபின்ட் பீட்டர்ஸ் பர்க்" என அழைக்கப்பட்டது. 1924ல்



லெனின் கிராட் ஆற்றங்கரையில் தோழர் சம்பத்

ஆரோகணித்துநிற்கும் — மாமன்னனின் கற்சிலை!

இதன் பெயர் "லெனின் கிராடு" என மாற்றியமைக்கப்பட்டது. பெயர் மாற்றத்தில் என்ன இருக்கிறதென்று பல தோழர்கள் வெகு சாதாரணமாகக் கேட்டு விடுகிறார்களே, அவர்கள் இந்நகரத்துக்கு இருமுறை ஏற்பட்ட பெயர் மாற்றத்தை கூர்ந்து நோக்கினால் அதில்எவ்வளவோ உள்ளதென்பதைக் கண்டு கொள்வார்கள், உணருவார்கள். "ஸெயின்ட் பீட்டர் பர்க்" என்னும் பெயரில் ஜெர்மனிய வாடை வீசுவதாக கருதி ஜெர்மனி மீதுள்ள பகை உணர்வு காரணமாக முதல் உலகப் போரின்போது அப்பெயரை அகற்றி அந்நகரை நிறுவிய பீட்டர் மாமன்னன் பெயரால் அதை அழைக்க விரும்பி "பெட்ரோகிராடு" எனப் பெயரிட்டனர். லெனின் மறைவிற்குப்பிறகு மாமன்னனைவிட மக்கள் தலைவனே மதிப்பு மிக்கவன் என்ற உணர்வில் மன்னன் பெயரால் விளங்கிய இந்நகரை மக்கள் தலைவன் பெயரால் அழைக்கத் தொடங்கிப் பெருமிதம் கொள்கின்றனர். ஆக பெயர் மாற்றத்தில் ஏதோ இருக்கிறதென்று புலனாகிறது அல்லவா!

லெனின்கிராடு நகரம் நூற்றிப்பத்து சிறு தீவுகளைக் கொண்ட நகரம் என்று கூறப்பட்டபோது அது என்னவென்றே எங்களால் எண்ணிப்பார்க்க முடியவில்லை. நீவா என்னும் ஆறு கடலோடு கலக்குமிடத்தில் தான் நகரம் தோன்றியுள்ளது. நீவா ஆறு கடலில் கலக்குமுன் நாற்பத்தியெட்டுக் கால்களாகப் பிரிந்தும், பின்னியும் கிடப்பதாலேயே நூற்றுக்கு மேற்பட்ட தீவுகள் ஏற்பட்டுள்ளன, இவைகளை ஏறத்தாழ நானூறுக்கு மேற்பட்ட பாலங்கள் இணைத்து பெரும் நகரத்தை உருவாக்கியுள்ளன. ஒவ்வொரு பாலத்தின் அமைப்பிலும் அந்நாட்டுக் கலைஞர்கள் தம் கை வண்ணத்தைக் காட்டியுள்ளனர். கரைக்கு இரு அழகிய சிங்கங்களை அமைத்து, அவை நான்கும் பாலத்தைக் கவ்விக்கொண்டிருப்பதுபோல் ஒரு இடத்திலும், ஆதி மனிதன் குதிரையை அடக்குவது போன்ற முகப்புகள் கொண்ட பாலமும் குறிப்பிடத்தக்கவை. ஆற்றின் இருமருங்கிலும் ஆங்காங்கே அழகிய படித்துறைகளமைத்து, அவைகளின் வாயிலின் இருமருங்கிலும் வகைவகையான சிலைகளை அமைத்து அழகு படுத்தியுள்ளனர். அவற்றுள் ஒரு படித்துறையில் இடது புறத்தில் ஒன்றும், வலது புறத்தில் ஒன்றுமாக இரு பளிங்குச் சிங்கங்கள் ஒவ்வொன்றும் தனது இடது முன்காலால் ஒரு பந்தை உருட்டும் பாவனையில் சமைக்கப்பட்டுள்ளன. அந்தப் பளிங்குச் படித்துறை மிகவும் அழகானது என்பது மட்டுமன்றி, கவிஞர்கள் பலரின் கவிதைகளும். பெரும் 'பேலே' காவியங்களிலும் இடம் பெற்றுள்ள நீவா ஆற்றின் இலச்சினையாகத் திகழ்கிறது. நகர் முழுதும் உள்ள கண்கவர் பூங்காக்களின் எண்ணிக்கைக்கு ஒரு அளவே இல்லை எனலாம். அது மட்டுமன்றி பெரும் பாதைகளின் நடுவே கண்ணுக்கினிய பூச்செடிகளும் சிறு மரங்களும் நெடுக வைத்திருக்கும் அழகு வியந்து பாராட்டத்தக்கது. நகரில் ஆங்காங்கே உள்ள பளிங்குச் சிலைகளும், கருஞ்சிலைகளும் கணக்கிலடங்கா. மன்னர்களுக்கும், தளபதிகளுக்கும் சிலை எடுத்துள்ளதோடன்றி, அழகுக்குச் சிலை எடுக்க எண்ணி புராணக் கதைகளில் வரும் மடவார்களும் சிலையெடுத்து ஆங்காங்கே அமைத்துள்ளனர். வரலாறும், கலையும் பின்னிப் பெற்ற அழகின் திருநகரமாய் லெனின் கிராடு நகரம் விளங்குகிறது. நவீன அழகு என்னதான் கூறினாலும் ஆரவாரம் மிக்கதாயும், அறைகூவும் தன்மை படைத்ததாயும் அச்சுறுத்த முயலுவனவாயுமே பெரிதும் விளங்குகின்றன, பழங்காலத்துக் கலையழகில் ஒருவிதக் கனிவு வழியும் அமைப்பினையும், காண்போர் தம்மை மறந்து மயங்கும் ஓர் உயிரூட்டமுள்ள எழிற் சக்தியினையும் நாம் காணுகிறோம். முன்னங்கால்களிரண்டையும் தூக்கிக்கொண்டு பாய்ச்சலில் நிற்கும் குதிரைமீது வாள் பிடித்து ஆரோகணித்து நிற்கும் பீட்டர் மாமன்னனின் கருங்கற் சிலையின் கம்பீரம் ஒரு முறை கண்டோர் வாழ்நாள் முழுதும் மறக்க இயலாத ஒன்று.

லெனின்கிராடில்உள்ள "அஸ்டோரியா" ஓட்டலில் நாங்கள் தங்கினோம். "அஸ்டோரியா" மாஸ்கோவில் உள்ள பீகிங் ஓட்டல் அளவு பெரியதாக இல்லாவிடினும் வசதியில் மிக்கதாய் விளங்கியது. உணவும் மாஸ்கோ ஓட்டலைவிட நமது சுவைக்கு உகந்ததாய் இருந்தது. மாஸ்கோவில் எங்களோடு பணியாற்றிய உடனுரை பெயர்ப்பாளர் வேலண்டினா, லெனின்கிராடுக்கும் எங்கள் குழுவோடு வந்தார். இருப்பினும், லெனின்கிராடு நகரில் அவ்வப்போது வேறுபல உடனுரை பெயர்ப்பாளர்கள் எங்களுக்கு உடனிருந்து பணியாற்றினர்.

லெனின்கிராடு நகரில் எப்பொழுமே பருவநிலை, நகர்காண வருவோருக்குத் தொல்லை தருவதாகவே இருக்கும் எனக்கூறப்பட்டது. இருந்தாற்போலிருந்து திடீர் திடீரென மழை வந்து விடும். குளிர்காலத்தில் ஒரு மூடுபனிப் படலத்தில் நகர் பெரும்பாலும் மூடப்பட்டிருக்கும்.

ஆனால் நாங்கள் சென்றபோது மழை அதிகம் தொல்லை கொடுக்கவில்லை. கதிரவன் ஒளி பளிச்சென்று வீசிக் கொண்டிருந்தது. லெனின் கிராடில் எங்களைச் சந்தித்து முகமன் கூறியவர்களனைவரும், வரும்போதே நல்ல பருவ நிலையை உடன் கொண்டு வந்துள்ளீர்கள். நேற்றுவரை மழைத் தொல்லை மிக அதிகம் என்றே குறிப்பிட்டனர். நாங்கள் அங்கு தங்கியிருந்த நாட்கள் அனைத்துமே இதே பருவநிலை நீடித்து லெனிகிராட் நகரின் எழிலை இதயம் நிரம்பி வழிய வழியப் பருக பெருந்துணை புரிந்தது.

லெனின்கிராட் நகரின் மக்களைப் பற்றி எவ்வளவு எழுதினாலும் நமது ஆசை தீராது. அவர்கள் நம்மிடம் காட்டும் அன்பு எத்தகையது என விளக்கச் சொற்களே இல்லை. கண்டதும் அவர்கள் முகத்தில் தோன்றும் மலர்ச்சியும் பேச்சில் ததும்பும் அன்பும் எவருள்ளத்தையும் கொள்ளை கொள்ளும், மாஸ்கோவில் உள்ள மக்களைவிட தோற்றத்தில் அழகாகவும் எடுப்பாகவும் லெனின்கிராட் மக்கள் விளங்குகின்றனர். அவர்களுக்கு அவர்களது நகரைப் பற்றி மிகவும் பெருமை; அதிலும் அதனை மாஸ்கோவோடு ஒவ்வொன்றிலும் ஒப்பிடடுத் தங்கள் நகரகே அனைத்திலும் சிறந்து விளங்குகிறது எனப் பெருமையோடு கூறி மகிழ்ச்சியடைகின்றனர். அதிலும் அங்கு செல்லும் நம்மைப் போன்றவிருந்தினர்கள் மாஸ்கோவை விட லெனின்கிராட் மிகவும் பிடித்திருக்கிறது என்று கூறினால் அவர்களடையும் மகிழ்ச்சிக்கு ஓர் அளவேயில்லை.

[தொடரும்]

கே. ஏ. மதியழகன்
சுற்றுப்பயணம்.

★

அக்டோ. 4 கரூர்.
,, 10 சென்னை.
,, 11,12,13 சிதம்பரம்.
,, 17, 18 சென்னை மாநாடு.



லெனின் கிராடிலுள்ள அனிக்கோவ் பாலம்

11-ஆம் ஆண்டு தலைவாயிலில் செஞ்சீனம்!

அக்டோபர் முதல் நாள், சீன மக்களின் வரலாற்றில் மிகப் பொருள் புதைந்த நாளாகும். அன்றுதான் பத்தாண்டுகட்கு முன்பு, 1949 ஆண்டு தங்களின் கரங்களிலும், கால்களிலும் பிணைக்கப்பட்டிருந்த அடிமைத் தளைகளை உடைத்தெறிந்தார்கள். சுதந்திரம் எனும் நிலை அடைவதற்கு அவர்கள் கொடுத்த காணிக்கை ஏராளம் – எண்ணற்ற வீரர்களைப் பலி கொடுத்து விடுதலை பெற்றனர். பல்லாயிரக் கணக்கான வாலிபர்கள் தங்களின் இன்னுயிர்களை தாயகத்தின் அடிமை நிலை அழிவதற்காக ஈந்தனர்.

அவர்கள் பட்ட துயர்கள், தொல்லைகள் வீண்போகவில்லை. எந்தத் தாயகம் நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் போன்ற ஆதிக்கச் சக்திகளின் கோரப் பிடியிலிருந்து விடுபட்டு, உழைப்பவனுக்கு உரிய பெருமை ஏற்பட வேண்டுமென்று கனவு கண்டார்களோ அது இன்று நனவாகிவிட்டது. அவர்கள் ஆசைப்பட்டது போலவே, பெற்ற பொன்னுடாம் சீனம ஒளிசிந்தும தாரகையாய் உலக அரசியல் வானில் இன்று திகழ்கிறது.

சீனத்தின் கடந்த பத்தாண்டு சாதனைகளையும், அடைந்துள்ள பெருமைகளையும் பாராட்ட உலகிலுள்ள பல்வேறுநாட்டுப்பிரதிநிதிகளும் தலை நகராம் பீகிங்கில் கூடியுள்ளனர். இரண்டு தினங்களுக்கு முன்பு அமெரிக்கப் பயணத்தை முடித்துக் கொண்டு வந்த சோவியத் பிரதமர் குருஷேவ், தன்னுடைய நாட்டின் சார்பாக விழாவில் கலந்து கொள்ள களிப்புடன் சைனு சென்றுள்ளார். அவரைப் போலவே உலகிலுள்ள மற்றப் பொதுவுடமை நாடுகள் ஏறத்தாழ 54 நாடுகள் தங்களின் பிரதிநிதிகளை அனுப்பி தங்களது நல்லுறவைப் பலப்படுத்த வழிகண்டுள்ளன.

சீன மண்ணில் கால் வைத்தவுடன் சோவியத் பிரதமர் குருஷேவ் ஒரு கருத்தை மிகத்தெளிவாக வெளியிட்டுள்ளார்கள். "சைனு இன்றைய தினம் உலக அமைப்பாம் ஐக்கிய நாடுகள் சபையில் இடம் பெறவில்லை, சீனநாடு சட்டப்படி ஐக்கியநாடுகள் சபையில் இடம் பெற்றாக வேண்டும். பிற்போக்குச் சக்திகள் எந்தஅளவு தடுத்து நிறுத்த முயன்றாலும், அது தனக்கு உரிய இடத்தை நிச்சயம் அடையத்தான் போகிறது – நீதி என்றும வெல்லும்!" என்று அவர் சிந்திய வாசகங்கள் சிந்தனைக்குரியனவாகும்.

1945-ஆண்டு அக்டோபர் திங்களில்தான் ஐக்கிய நாடுகள் சபை தோன்றியது. அதனைத் தோற்றுவித்தவர்கள் எந்த புனித இலட்சியங்கள் செயல்படவேண்டுமென்று கருதினார்களோ, அது நிறைவேறவில்லை. சமாதானமும் அமைதியும் மனித சமுதாயத்தில் நிலவ வேண்டும், கீழான சுபாவங்களால் உயரிய வாழ்க்கைகளை இழந்துவிடக் கூடாது என்பதற்காகவே நல்ல அடிப்படையோடு துவக்கினார்கள். ஆனால் சமாதானத்தின் நிலைக்களனாக பணியாற்ற வேண்டிய மாமன்றம், சச்சரவுகளின் பிறப்பிடமாகத் தோற்றமளிக்கிறது. குறிப்பிட்ட சில வல்லரசுகளின் விருப்பு வெறுப்புகளை நிறைவேற்றும் சாதனமாகவே கடந்த பதினான்கு ஆண்டுகளாக செயல்பட்டு வருவதை நடுநிலைமை உள்ளம் கொண்ட அனைவரும் உணர்வர்.

மனித சமுதாயத்தை எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகள் பலவற்றிற்கு பரிகாரம் காட்ட முடியவில்லை யென்றாலும், பல்வேறு நாடுகளுக்கிடையே தோன்றிய சிக்கல்கள் பலவற்றைத் தீர்த்து சுமுகமான வழியினைக் காட்டியிருக்கிறது என்பதனை எவரும் மறுக்க முடியாது. போரால் தீர்க்க முடியாத பலகாரியங்களை மனம திறந்து பேசும் சுமுகமான பேச்சு வார்த்தைகளால் நிறைவேற்ற முடியும் என்ற அடிப்படையில்தான் ஐ. நா. சபையே பிறந்தது. அதுதான் சாத்தியமான பாதையும்கூட.

சைனு நாட்டை ஐ. நா. சபையில் அநுமதிக்க மறுப்பதின் வாயிலாக அமெரிக்கா போன்ற நாடுகள் உலக சமாதானத்திற்குத் தடைக் கற்களாகக் காட்சியளிக்கின்றார்கள். சைனு நாடு ஐ. நா. சபையில் இடம் பெறாத வரையில் 'உலக சமாதானம்' என்பது வெறும் சுவையான வார்த்தைக் கூட்டங்களாகத்தான் காட்சியளிக்கும். கம்யூனிசம் என்ற கோட்பாடு சிலருடைய மனதுக்குப் பிடிக்காத தத்துவமாகத் தோன்றலாம். ஆனால் உலகின் நாலில் ஒரு பகுதி மக்கள் வாழும் சீனநாடு தங்களின் புதுவாழ்வுக்கு அதுதான் உகந்த மார்க்கம் எனபதனை ஏற்றுக்கொண்டு நீண்ட நாட்களாகி விட்டன. கண்ணை மூடிக்கொளவதால் மட்டும் உண்மை மறைந்துவிடும் என்று எண்ணுவது ஏமாளித்தனம். நீண்ட நாட்கள் கனவுலகில் வாழ முடியாது.

சோவியத் ரஷ்யா இன்று ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கின்றது. நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்கின்றனர். ஆனால் சோவியத் ரஷியாவின் நுழைவை ஒப்புக்கொள்ளும் சிலர்கள்தான், மக்கள் சீனத்தின் வருகையினை விரும்ப மறுக்கிறார்கள். இதயக் கதவைத் தாளிட்டுக் கொள்கிறார்கள். விசித்திரம் மட்டுமல்ல வேதனையும் இந்தச் சம்பவத்தில் பின்னிக் கிடக்கின்றது.

கடந்த பத்தாண்டு காலத்தில் இவ்வளவுவிரைவில் முன்னேறிய நாடுகளை விரல்விட்டு எண்ணிவிடலாம். சீனம் இருபது வருடங்களுக்கு மேல் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டிருந்த ஒரு நாடு. அது மட்டுமல்லாமல் விவசாயத்தையே பெரும் பகுதியான மக்கள் மிக முக்கியமான தொழிலாக ஏற்றுக்கொண்டிருந்தார்கள். அமெரிக்க ஏகாதிபத்யம் போன்றவைகள் கிடைக்கும் கனிவளங்களையும், சந்தைகளையும் தங்களின் சுரண்டலுக்குக் கருவியாகப் பயன்படுத்தி வந்த இழிநிலை. எந்த முனையிலும் இம்மியளவுகூட முன்னேற முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தனர். மாவீரன் மாசேதுங் போன்ற கர்ம வீரர்களின் சீரிய தொண்டாலும் முயற்சியாலும் இருண்ட அவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றப்பட்டது. ஒரு நாட்டின் முன்னேற்றம் இயற்கை வளத்தை மட்டும் பொருத்ததல்ல. தீரமும் திறமும், அறிவாற்றலும், விடாமுயற்சியும் மற்றும் இதுபோன்ற பண்புகளைப்பெற்ற தலைவர்களை வழிகாட்டிகளாய் கொண்டிருந்தால்தான் வெகு விரைவில் புதுவாழ்வு காண முடியும். சீனத்தைப் பொறுத்தவரையில் எந்த நாடும் பெருதவசையில் ஆற்றல் மிக்க தலைவர்களாகிய மாசேதுங் லீ சேஷி சூ – என் – லாய் போன்ற தியாகத்தின் சின்னங்கள் நாட்டின் நிர்வாகிகளாகத் திகழ்கிறார்கள். சீனத்தைப் பொறுத்தவரையில் சமுதாய அரசியல் பொருளாதாரத் துறையில் எண்ணற்ற பிரச்சினைகள் எதிர்நோக்கியுள்ளன மனத்திண்மையும் சலியாத உழைப்பும், விடாமுயற்சியும் கொண்ட சீன சமுதாயம் எண்ணியதைச் சாதிக்கும். தொழிற்துறையிலும் விவசாய அரங்கிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அனைவரையும் பிரமிக்கச் செய்கின்றன. அதில் மிகுந்த நம்பிக்கை நமக்குண்டு. அந்த வகையில் இன்று புதுவாழ்வுக்காண பதினோராம் ஆண்டு நுழையும்செஞ்சீனத்தை நாமும் வாழ்த்துகிறோம்,

★

சிதம்பர இரகசியம்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ். "காகிதப்பூ மணக்காது, காங்கிரஸ் சோஷலிஸம் இனிக்காது" என்ற அண்ணாவின் வாக்கை நாளும் மெய்ப்பிக்கும் காங்கிரஸ். பதினெழு கோடி ரூபாய் வரி இருந்ததை எழுபது கோடி ஆக்கிவிட்டு புதிய வரி இல்லை என்று வேஷம் போடும் காங்கிரஸ்—உணவுபண்டங்களின் விலையை உயர்த்தி கட்டுப்படுத்தாது, பதுக்கல் முறையைத் தடைச் செய்யாது அதனை நீடிப்பதற்கு கடன் கொடுக்கும் நிறுவனங்களை தடுககாத. காங்கிரஸ் – நெசவாளர்களின் வாழ்வை சீர்குலைத்து, இருந்துவந்த 'ரிபேட' தொகையையும் குறைத்துள்ள காங்கிரஸ்—ஆதி திராவிடமக்கள் 'நந்தனர்' காலத்தவராகவே இருக்கவேண்டும் என்று கருதும் காட்டுமிராண்டி காங்கிரஸ்—பஸ் தொழிலை தேசிய மயமாக்க வேண்டும், என்று அறிஞர் அண்ணா கூறிய யோசனையை அமுல் நடத்தினால், தங்கள் தேர்தல் இயந்திரம் பழுதுபட்டு விடும் என்று கருதும் காங்கிரஸ்—வரி விதிப்பதை விட்டு, வருவாயைப் பெருக்கிக் கொள்ளும் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று அண்ணா அவர்கள் கூறும் மேலான கருத்தினை ஏற்றுக்கொள்ள மறுக்கும் பிடிவாதக் காங்கிரஸ் – 'சுயமரியாதைத் திருமணம் சட்டப்படி செல்லுபடியாக்க முயலாத காங்கிரஸ் – அறிஞர் அண்ணா அவர்கள் திருவல்லிக்கேணி கடற்கரையிலே பேச தடை விதித்த காங்கிரஸ்—இந்த செயல்களுக்கெல்லாம் அங்கீகாரம் கேட்க சிதம்பரம் வந்துள்ளது.

சிதம்பரம் வாக்காளப் பெருங்குடி மக்களே! உங்கள் தீர்ப்பு என்ன? துப்பாக்கிப் பிரயோகத்தில் மாண்ட, குண்டுக் காயம்பட்ட பரிதாபத்திற்குரியவர், உங்கள் வீட்டுப்பிள்ளைகளாக இருந்தால், அண்ணன் தம்பியாக இருந்தால், உற்றார், உறவினர் நண்பர்களாக இருந்தால், அக்டோபர் பதினெட்டு அன்று ஓட்டுச் சாவடிக்கு போகிறநேரத்தில் மனந்துணிந்து மாட்டுச் சின்னத்தில் முத்திரையிட முடியுமா என்று இரத்தம் கொதிக்கக் கேட்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் புலவர் ஆறுமுகம் இளைஞர். வாதாடும் திறமையுடையவர், அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பயின்றவர், ஆதி திராவிட மக்களுக்காக இளம்வயது முதற்கொண்டு உழைத்துக்கொண்டுவரும் விடுதலை வீரர். அவரின் வெற்றி நீதி, நேர்மை விடுதலையுணர்வுகளின் வெற்றி; 'புதுவையில் பூஜ்யம்' என்றவர்களுக்கு "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்றார் அறிஞர் அண்ணா. அந்த நம்பிக்கை மொழி சிதம்பரம் வாக்காளர்களுககு ஆயிரம் ஆற்றலைப் பெற்றுத் தரட்டும். 'சிதம்பர இரகசியம்' என்ன என்பதை ஊரும் உலகமும் தெரியட்டும்.

★

இந்தியா–நொண்டிக் கிளியா? சண்டிக் குதிரையா?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது. இதனால் பணம் பாழாகியிருக்கிறதே தவிர பலன் ஏதும் கிட்டவில்லை!

நீர் வளத்தை – நிலவளத்தைப் பெருக்குவதைக் காட்டிலும், ஒரு சர்க்காருக்கு கிரிக்கெட் விளையாட்டே முக்கியம் என்ற நிலை எங்கெனும் உருவாகிவருகிறது என்பது உண்மைதான். முக்கியமென்று உணர்வதையாவது நியாயமான முறையில் நிறைவேற்ற முனைகிறார்களா என்றால் இல்லை. ஐந்து வயதுச் சிறுவனிலிருந்து ஐ. ஏ. எஸ். படிக்கும்மாணவர்வரை இந்தியாவில் கிரிகெட் விளையாடுகிறார்கள். இதுவரை இந்தியா கிரிக்கெட்டில் வெளிநாட்டில் வெற்றி பெற்றிருக்கிறதா – வெற்றிபெறுவதற்கான வாய்ப்பாவது கிட்டியிருக்கிறதா? அந்த அறிகுறியே இல்லை. ஆனால் ஆண்டுதோறும் அந்தச் 'சர்கார் விளையாட்டு'க்குச் செலவாகும் தொகையோ அளவிட முடியாதவை.

இந்தியக் கிரிகெட் குழுவினருக்கு ஆண்டுக்கு மூன்று முறை அரசியலாரின் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தடவைக்கு அறுபதாயிரம் ரூபாய் அதற்கெனச் செலவாகிறது. இது நீங்கலாகக் குழுவினர்வெளிநாட்டுக்குப் போய்வரும் 'இராஜ உபசாரச் செலவு' வேறு தனியாக உளது. இத்தனையும் வீண் விரயம் என்று நாம் சொல்லவில்லை; அவர்களின் 'விளையாட்டு விவேகமே' எடுத்துக் காட்டுகிறது. இதற்[illegible] காரணமில்லாமலில்லை. விளையாடைத் தெரிந்தவர்களெல்லாம் தென்னாட்டிலிருந்து கொண்டு, விளையாடப்போனவர்களின் முடிவை அறிய ஆங்கிலப் பத்திரிகைகளை புரட்டிக் கொண்டிருக்கிறார்கள்—என்பதுதான் வெளிப்படை! தென்னாட்டைப் பிரிக்கவும் கூடாது, தென்னாட்டை மதிக்கவும் கூடாது என்ற எண்ணம் இமயமலைச்சாரலிலுள்ள பெரிவர்களில் யாருக்காவது இருக்குமானால் அவர்கள் கிரிக்கெட்டைப் பொறுத்தவரையில், தோற்றுப்போன நரியைப் போல் 'திராட்சைப்பழம் புளிக்கும்' என்று கூறிவிடுவது உத்தமம். இதனால் உலகச் சந்தையில் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் கௌரவம் பாதிக்கப்படும் என்று யாரும் எண்ணுவதற்கில்லை. கௌரவம் பாதிக்கப்படுவது அவருக்குச் சாதாரணம்!

ஒலிம்பிக் விளையாட்டுப்பந்தய நிகழ்ச்சி நிரலில் காணப்படும் விளையாட்டுக்களில் – இந்தியாவில் வல்லவர்கள் தமிழர்கள்தான் என்பதை இந்தியசர்க்கார் நன்கு உணரவில்லை என்று யாரும் சொல்லிவிட முடியாது. அதற்குப்பல சான்றுகளை நாம் காட்ட முடியும்.

வாலிபால் ஆட்டத்தின் பிறப்பிடம் எதுவாயினும் தென்னாட்டவர்கள் அதில் கைதேர்ந்தவர்கள் என்பது நாடறிந்த உண்மை. நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த அருணாசலமும், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பழனியாண்டியும் கீர்த்திபெற்றவாலிபால்ஆட்டக்காரர்கள். குஜராத்[illegible]களுக்கும், கூர்க்கர்களும் இருந்த புகழைத் தட்டிப்பறித்த பெருமை அருணாசலத்தையும், பழனியாண்டியையும் சாரும் என்பதற்காக தென்னாட்டார் என்றமுறையில் நாம் மகிழ்வுறக் கடமைப்பட்டிருக்கிறோம். வாலிபால் ஆட்டத்திற்கு உலகமெல்லாம் செல்வாக்கு இருக்கிறது. அத்தகைய செல்வாக்குப் பெற்றஆட்டத்தை வெற்றிகரமாக விளையாடிக்காட்டும் வீரர்கள் இங்கிருக்கிறார்கள். ஆனால் அந்த விளையாட்டை மேலும் ஊக்குவிக்க அரசுக்கு நாட்டமில்லை. இதற்குக் காரணம் அருணாசலமும் பழனியாண்டியும் தமிழர் என்பதால் ஏற்பட்ட பிறவிக் கோளாறுதானே!

இன்னொன்று, உலக விளையாட்டரங்கில் டென்னிஸ் ஆட்டத்திற்குத் தனி மதிப்புண்டு, எல்லோர் மனதைக்கவரக்கூடிய விளையாட்டுக்களில் அதுவும் ஒன்று, இந்த விளையாட்டில் தமிழகத்தைச் சேர்ந்த தோழர் கிருஷ்ணன் உலகப் புகழ்பெற்றவர். கிரிகெட்டில் பறிபோகும் கௌரவத்தை ஈடுசெய்வது கிருஷ்ணனின் டென்னிஸ் ஆட்டம்தான் என்பது கண்கண்ட உண்மை. ஆனால் மானம் காக்கும் கிருஷ்ணன், அவருக்குள்ள மரியாதையோடு நடத்தப்படவில்லை என்ற புகார் இப்பொழுது எங்கும் அடி[illegible]பட்டுக் கொண்டிருக்கிறது. '[illegible]ளையாட்[illegible]த் தகவல்களை' புறாபோல் புவனமெல்லாம் 'சொல்லிவரும்' இந்து பத்தி[illegible]கைகூட இந்திய அரசியலார், டென்னிஸ் கிருஷ்ணனை நடத்துமமுறைபற்றிக்கண்டித்து அண்மையில் ஒரு கடிதத்தை வெளியிட்டிருக்கிறது. பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற பேதத்தையும் மறந்து 'தென்னாட்டான்' என்ற காரணத்தை மட்டும்கொண்டு அவரை அவமானப்படுத்துவது கொடிய செயலாகும்.

'இந்தியன்' என்ற பட்டயத்தைப் பெற்றுக்கொண்டு வெளிநாடுகளுக்குவிளையாடப்போகும் 'திராவிட நாட்டுக் கிருஷ்ணன்' தனது பாதுகாப்புக்காக நிகழ்ச்சி குறிப்பதற்காகஇரண்டு பேரை உடன் அழைத்துச் செல்வதற்கான செலவு தொகையை இந்திய அரசியலார் ஏற்க மறுப்பது கேவலமானதாகும்.

நியூயார்க்கில் விளையாடிக் கொண்டிருக்கும் கிருஷணனை ஆஸ்திரேலியா அழைக்கிறது. அப்போது முன்கூட்டியே ஆஸ்திரேலியா சென்று கிருஷ்ணன் வருகைக்கான ஏற்பாடுகளைச் செய்ய கிருஷ்ணனுக்கு வசதி செய்து தரப்படுவதில்லை. அது மட்டுமல்ல; ஊண் உறக்கம் கொள்ளுவதற்குக்கூட தங்குமிடம் அமைத்துக் கொடுப்பதில்லை என்றால் கிருஷ்ணன் தென்னாட்டவர் என்பதற்காக காட்டப்படும் ஓரவஞ்சனையான செயல் என்பதைத் தவிர வேறு என்ன காரணமாக இருக்க முடியும்? நம் நாட்டின் தூதுவர்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

சிங்கமெனப் பாய்ந்தெழு!

★

புதுமையன்

வாளும், வடித்தெடுத்த
வேலும், தினவெடுத்த
தோளும் தனை நீவித்
தூயதமிழ்ச் சங்கொலித்துக்
கேளுமிதைக் கேளுமெனக்
கேட்க முரசார்த்தே
நாளும் வளர்விடுத–
– தலைப்போர்க்கு வந்திடடா!

நாட்டின் நலனழித்து
நம்மையெலாம் வேரறுத்துக்
காட்டிக் கொடுக்கும்
கயவர்தம் கையிலுள்ள
ஈட்டிவரும் போதில்
எதிரிநெஞ்சில் உன்னீட்டி
ஓட்டித் தமிழ்க்காக்க
உத்தமனே வந்திடடா!!

சேரர் செருவிளைத்த
செய்தியெலாஞ் செப்புகின்ற
வீரத் தமிழழிக்க
வீணர்களிங் கிந்தியெனும்
சோரச் சிறுக்கிதனைச்
சுற்றவிடல் கண்டாய்நீ!
தீரத் துடனெழுந்தே
இந்தமிழா வந்திடடா!

வீழுங் குணங்களிலா
வீரப் பெருமையெலாம்
சூழுங் கடல்தாண்டிச்
சொல்லிவந்த செந்தமிழ்க்(கு)
ஆழக் குழிதோண்டும்
ஆட்சியினைக் கொன்றொழிக்க
வாழுந் தமிழ்மகனே!
வாளெடுத்து வந்திடடா!

பாண்டியரின் நாட்டிடையே
பார்போற்றும் சங்கமதில்
வேண்டும் வகைசெழித்து
வீற்றுள தமிழ்நீக்கி
ஆண்டிமொழி இந்தி
அரசுசெய்ய வந்ததென்றால்
தாண்டியெழுந் தார்த்துத்
தமிழ்ப் போர்க்கு வந்திடடா!

கங்கைநதி நீரமெலாம்
காலடியில் வீழ்ந்தகதை
பொங்கிமிய மீதுபுலி,
வீற்கெண்டை, போட்டகதை
இங்குநமை ஆள்வோர்க்(கு)
எடுத்துரைக்கவே கொதித்துச்
சிங்கமெனப் பாய்ந்தெழுந்தே
செந்தமிழா வந்திடடா!

விமர்சனம்

அருணாசலம் ஸ்டுடியோஸ்
காவேரியின் கணவன்

மணல்வீடு கட்டி மகிழ்ந்திருந்த நேரத்தில் கழுத்திலே தாலி ஏறுகிறது காவேரிக்கு. தாலி கட்டியவனை படிக்க வேண்டும் என்ற ஆசையில் கடல் கடந்து சென்று விடுகிறான். படிக்கச் சென்றவன் பட்டம் பெறுவதற்குள், அவனை பட்டதாரி ஆக்க தன் சொத்தை அர்ப்பணித்த காவேரியின் தந்தை வறுமையிடம் அடைக்கலம் தேடுகிறார்.

பொன்னும் வெள்ளியும் சீதனமாக வரும் என்று மனக்கோட்டை கட்டிய மாமி, காவேரியின் ஏழ்மையைக்கண்டு அவளை மருமகளாக ஏற்க மறுக்கிறாள்.

வெறும் ஏகாம்பரமாகக் கப்பல் ஏறியவன் டாக்டர் ஏகாம்பரமாக தமிழகத்து மண்ணை மிதிக்கிறான். பொங்கி வந்த பெருவெள்ளத்தில் காவேரி போய்விட்டாள் என்ற செய்தி அறிகிறான். எனவே, வேறொருத்தியை மணக்கிறான். அவள் ஒரு மகனை பரிசளித்துவிட்டு, இம் மண்ணுலக வாழ்க்கையே வேண்டாம் என்று போய்விடுகிறாள்:

டாக்டர் ஏகாம்பரம் பெண்களையே வெறுக்கிறான். அவன் மகன் மணியோ, அம்மா, அம்மா என்று கதறுகிறான். அந்த நேரத்தில் காவேரி அந்த வீட்டல் வேலைக்காரியாக வந்து சேருகிறாள். தாயைத் தேடி அலைந்த மணி அவளை தன் அம்மாவாக ஏற்றுக்கொள்ளுகிறான்.

இதன் பிறகு திரைக் கதை ஓடுகிறது.

கதையைப் பொறுத்தவரையில் அதிகமான திருப்பங்களோ குழப்பங்களோ இல்லாமல் தெளிந்த நீரோடை போல ஓடுகிறது. காவேரியின் கணவன் டாக்டர் ஏகாம்பரம்தான் என்பதை காவேரியும் ஏகாம்பரமும் புரிந்து கொள்வது போலவே படம் பார்ப்பவர்களும் முன்னதாகவே புரிந்து கொள்கின்றனர். காற்று மழையில் அடிபட்டு 'கிளைமாக்ஸ்' க்குச் செல்லும் படம் அதன் பிறகு நல்ல முடிவுக்காக கொஞ்ச நேரம் சப்பென்று ஓடுவானேன்?

இதில் அபலை காவேரியாக வரும் சௌகார் ஜானகி நடிப்பில் முதலிடத்தைப் பிடித்துக் கொள்கிறார். டாக்டர் வீட்டில் வேலைக்காரியாக இருப்பதை விபரீத அர்த்தத்தோடு ஊர் பெண்கள் பிரச்சாரம் செய்வதைக்கேட்டு குமுறுவது இயல்பாக இருக்கிறது. 'அவர் ஆண், ஒருத்தி மாண்டுவிட்டாள் என்றதும் மற்றொருத்தியைத் தேடிக் கொண்டார். நான் பெண் — என்ன செய்ய முடியும்?' என்று நெஞ்சு பொறுக்காது தன் மாமியிடம் கேட்கும்போது தமிழகத்துப் பெண்களின் குரல்கள் ஒருசேர ஒலிப்பது கேட்கிறது.

கதாநாயகன் — வளையாபதி முத்துகிருஷ்ணன். அவருக்கு அதிக பாகமில்லை. கொடுக்கப்பட்ட பாகத்தைத் திறமையுடன் செய்து முடித்திருக்கிறார். தன் மகன் நிலையை மோசமான நேரத்தில் தன் எதிரியின் வைத்தியத்திற்காக ஓடுகிறாரே, அது நன்றாக இருக்கிறது.

டப்பாங் குத்துரஸிகர்களுக்கு பக்கிரிசாமி நல்லவிருந்துபடைக்கிறார், நகைச்சுவைப் பகுதியில் நல்லபெயர் சம்பாதித்துக்கொள்கிறார், பக்கிரிசாமி 'வாழ்வதா, சாவதா' என்று கேட்கும் தமிழ் எழுத்தாளனிடம் 'அது உன் இஷ்டம்' என்கிறாரே அது ரசிக்கும்படி இருக்கிறது.

கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்புகளை ஏ. கே. வேலன் ஏற்றிருக்கிறார். வசனம் எளிமையும், இனிமையும் கலந்து ரசிக்கும்படி அமைந்துள்ளது. டைரக்ஷனும் குறைவு ஏதும் இன்றி செய்துள்ளார்.

'கன்னி இளம் பருவத்திலே' என்ற பாடலும் 'சின்னச் சின்ன நடைநடந்து' என்ற பாடலும் இனிமையாக உள்ளன. இசை கே.வி. மகாதேவன் பாராட்டும்படி இசை அமைத்துள்ளார்.

நல்லபடம் பார்த்தோம் என்ற திருப்தியோடு வெளியே வருகிறோம்.

அக்டோபர் 16வ இதழில்

K.A. மதியழகன்

தீட்டும்

★

கொங்கு நாட்டு தீரன்சின்னமலை

வசீகரத் தொடர்கதை ஆரம்பமாகிறது

★

வண்ணச் சுவரொட்டிகள் தயாராகின்றன

விற்பனையாளர்களுக்கு விரைவில் அனுப்பப்படும்

விவரங்கட்கு:

"தென்னகம்"

சென்னை-6.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

உலகமெல்லாம் இருக்கிறார்கள் என்று வான்முட்டப் பேசப்படுகிறது. அந்தத் தூதுவர்கள் கிருஷ்ணனைக் காண மறுப்பதேன்? இந்தியத் தூதுவர்களில் பெரும்பாலோர் விந்தியம் கடந்தவர்களாக இருப்பதாலா? இதற்கெல்லாம் விரைவில் விடை கிடைத்தாக வேண்டும்.

உலக ஒலிம்பிக் ஆட்டத்தில் ஹாக்கி விளையாட்டில் இந்தியா ஐந்துமுறை வாகை சூடியிருக்கிறது. அந்தவெற்றி வீரர்களில் தமிழர்களும் இருக்கிறார்கள். ஆனால் அந்த விளையாட்டுக்குரிய மதிப்பு தரப்படவில்லை. இத்தனைககும் அது தேசிய விளையாட்டு என்ற தகுதி பெற்றது.

ஒலிம்பிக் பந்தயத்தில் பளு தூக்குவதற்கென்றே ஒரு போட்டி வைத்திருக்கிறார்கள். இந்தியா அதில் வெற்றி பெற்றதே இல்லை. ஆனால், ஒலிம்பிக்கில் வெற்றிபெற்றவன் தூககிய பளுவை மிக எளிதாகத் தூக்கிக் காண்பித்தான் தூத்துக்குடியைச் சேர்ந்த ஒரு தமிழன். அவருக்கு மேலும் பயிற்சி கொடுத்தால் உலக அரங்கில் இந்தியாவுக்கு ஒரு பெருமை கிடைக்கும் என்று அரசியலாருக்கு அனுப்பிய தகவல்கள் எல்லாம் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. தூத்துக்குடியில் பிறந்தவன் டேராடூனில் பிறந்திருந்தால் இன்று அவனுடைய வரலாறு திரைப்படமாகக்கூட வந்திருக்கும்!

திராவிடமே! நீ வலிவு பெற்றிருப்பதும் ஒன்றுதான், பொலிவிழந்து மூழ்கிக் கிடப்பதும் ஒன்றுதான் வேறுபாடில்லை!

★

வாழ்க செங்குட்டுவன்-அரவிந்தநாயகி



"நம்நாடு" இதழில் துணையாசிரியராகப் பணியாற்றிவருகின்ற தோழர் மா. செங்குட்டுவன், சென்ற 31-8-59 அன்று திருவேதிகுடியில் தோழியர் அரவிந்த நாயகியைத் தன் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார்.

அச்சிடுபவர்: கே. இராசாராம், பி.ஏ., கஸ்தூரி லித்தோ ஒர்க்ஸ், 34, சின்னத்தம்பி தெரு, சென்னை-1.
ஆசிரியரும், வெளியிடுபவரும்: கே. ஏ. மதியழகன், பி.ஏ., 126, மவுண்ட் ரோடு, சென்னை-6.